கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.டி.சுரேஷ், பி.வி.எஸ்சி & ஏ.எச்.,

ந.க. அ4/11356/2021

நாள்:09.09.2021

**பொருள்:** பொதுப்பணி - நேரடி தேர்வு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தொகுதி IV - 2007-2008 முதல் 2012-2013 வரையிலான ஆண்டிற்கு ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகில் தேர்வு செய்யப்பட்டது - பணியில் சேர்ந்தது - கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலகில் - பணிவரன்முறை செய்து - ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**

1) செயலர், அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடிதம் எண். 866/PSD-01/2013 நாள்: 17.01.2013.
2) ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ4/30636/2012, நாள்: 20.02.2013.
3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடிதம் எண். 3860/CV5/2020-3, நாள்: 21.05.2021.
4) வட்டாட்சியர், கல்வராயன்மலை என்பவரின் கடிதம் நாள்: 05.08.2021.

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு - IV-ன் மூலம் தேர்ச்சி பெற்ற பார்வை 1-ல் காணும் க்டிதத்தின் வாயிலாக ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதின் பேரில், பார்வை 2-ல் காணும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டது.

பார்வை 1-ல் காணும் கடிதத்தில் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கிடு செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு பணியிடம் வழங்கி கீழ்கண்ட நாளில் பணியில் சேர்ந்துள்ளார். தனியர் பணியில் சேர்ந்த விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | பணியிடம் வழங்கப்பட்ட அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. ப்பி. வெங்கடேசன்,<br>த/பெ. பெரியசாமி,<br>சின்னக்கரட்டூர்,<br>நரிப்பாடி அஞ்சல்,<br>கெங்கவல்லி வட்டம்,<br>சேலம் மாவட்டம் - 636 105. | இளநிலை வருவாய் ஆய்வாளர்<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>சின்னசேலம். | 25.02.2013 பிற்பகல் |

தனியர் இந்து-மலையாளி வகுப்பை சார்ந்தவர் ஆவார். பார்வை 3-ல் காணும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, சாதிச்சான்று எண்.75549, R.Dis 4585/2001, நாள்: 25.09.2001-ன்படி இந்து-மலையாளி என ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்று மெய்தன்மை உடையது என வரப்பெற்றுள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகிற்கு தமிழ்நாடு அமைச்சுப்பணயில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நபரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த அவருக்கெதிரே உள்ள தேதி முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளில் விதி 23(a)-ன்படி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையினை உரிய அலுவலர் மூலமாக சம்பந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விபரத்தினை உடன் இவ்வலுவலத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-டி.சுரேஷ்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
கள்ளக்குறிச்சி

-/உ.ந.உ.ப./-

அலுவலக மேலாளர் (பொது)

4/9/2021

**பெறுநர்**
சம்பந்தப்பட்ட நபர்
உரிய அலுவலர் சம்பந்தப்பட்ட நபருக்கு மேற்படி ஆணையினை சார்வு செய்து, சார்வு நகலினை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்).
**நகல்:** வருவாய் வட்டாட்சியர், கல்வராயன்மலை.
**நகல்:** வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி.
**நகல்:** அ4 இருப்பு கோப்பிற்கு.